www.Padasalai.Net www.TrbTnpsc.com

# இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு-2025

## பத்தாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி

தமிழ்

மதிப்பெண்கள்: 100

பகுதி - அ

உரிய விடையைக் குறியிட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக:- 15×1=15

1) சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ______
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

2) 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும், வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே ______
அ) திருப்பதியும், திருத்தணியும் ஆ) திருத்தணியும், திருப்பதியும்
இ) திருப்பதியும், திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும், பழனியும்

3) கூற்று 1: போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்
கூற்று 2: அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது
அ) கூற்று 1 தவறு 2 சரி ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி

4) பூக்கையைக் குவித்துப் பூவே புரிவோடு காக்க என்று ______ வேண்டினார்.
அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக
இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

5) செயற்கை நுண்ணறிவு பொதிந்த இயந்திரங்களுக்கு ______ தேவையில்லை
அ) மின்சாரம் ஆ) மின்கலன் இ) ஓய்வு ஈ) மென்பொருள்

6) 'இங்கு நகரப் பேருந்து நிற்குமா? என்று வழிப்போக்கர் கேட்டது ______ வினா.
'அதோ, அங்கே நிற்கும்' என்று மற்றொருவர் கூறியது ______ விடை
அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை
இ) அறியாவினா, சுட்டுவிடை ஈ) கொளல்வினா, இனமொழிவிடை

7) திருவடியில் அணிந்த சிறு செம்பொன் கிண்கிணிகளோடு ______ ம் சேர்ந்து ஆடியது
அ) சிலம்பு ஆ) சுட்டி இ) அரைநாண் ஈ) குழி

8) 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

9) விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை ______
அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

10) 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது ______
அ) வணிகக் கப்பல்களும், ஐம்பெரும் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும், அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

11) பெரிய மீசை சிரித்தார் - இச்சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

Scanned with CamScanner

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக

மாற்றம் எனது மானிடத் தத்துவம்
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்பதறிந்து ஏகுமென் சாலை!

12) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ) சிலப்பதிகாரம் ஆ) தேம்பாவணி இ) காலக்கணிதம் ஈ) நீதிவெண்பா

13) இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) இளங்கோவடிகள் ஆ) கண்ணதாசன் இ) வீரமாமுனிவர் ஈ) செய்குதம்பிப் பாவலர்

14) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடிமோனை எது?
அ) மாற்றம், மானிடத் ஆ) மாறும், மகத்துவம்
இ) மாற்றம், மாறும் ஈ) என்பதறிந்து, ஏகுமென்

15) 'எவ்வெவை' - பிரித்து எழுதுக.
அ) எவை+யவை ஆ) எவ்+எவை இ) எவை+இவை ஈ) எவை+எவை

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- 4×2=8
(21வது வினா கட்டாய வினா)

16) விடைக்கேற்ற வினா அமைக்க:
அ) அன்புச் செல்வன் திறன்பேசியின் தொடுதிரையில் படித்துக் கொண்டிருந்தார்.
ஆ) அவர் குடும்பம் முன்னேறியிப்பதற்குக் காரணம் தொடர்ந்து முயல்வதும் தொழிலில் அவருக்கிருந்த அறிவும் தான்

17) வசனக் கவிதை குறிப்பு வரைக.

18) 'மெய்க்கீர்த்தி' பாடப்படுவதன் நோக்கம் யாது?

19) குறிப்பு வரைக - அவையம்

20) நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக

21) 'வினை' - என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க 5×2=10

22) கூட்டப் பெயர்களை எழுதுக. அ) ஆடு ஆ) கல்

23) எதிர்மறையாக மாற்றுக:
அ) மீளாத்துயர் ஆ) எழுதாக் கவிதை

24) தொடர்களை முழுமை செய்க
பொது வாழ்வில் ______ கூடாது ______ இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல், நடிப்பு)

25) முரசொலி ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கி வார இதழாக்கி, நாளேடாக்கினார் கலைஞர். (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)

26) கலைச்சொல் தருக. அ) Tempest ஆ) Guild

27) ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக:
அ) சைதாப்பேட்டை ஆ) கோயம்புத்தூர்

28) மரபுத்தொடருக்கான பொருள் அறிந்து தொடரில் அமைக்க
அ) கண்ணும் கருத்தும் ஆ) ஆறப்போடுதல்

Scanned with CamS

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- 2×3=6

29) "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ" - வினவுவது ஏன்?

30) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்கு சில எடுத்துக்காட்டுகள் தருக.

31) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது. தம்மை விட வலிமை குறைந்தரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

வினாக்கள்:

அ) போர் அறம் என்பது எவற்றைக் குறிக்கிறது?

ஆ) ஆவூர் மூலங்கிழார் போர் அறம் குறித்து குறிப்பிடுவது யாது?

இ) போரில் யாருக்கெல்லாம் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க:- 2×3=6

(வினா எண். 34க்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)

32) 'முதல் மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

33) வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

34) "புண்ணியப் புலவீர்" எனத் தொடங்கும் திருவிளையாடற்புராணப் பாடலை எழுதுக.

(அல்லது)

"தூசும் துகிரும்" எனத் தொடங்கி 'மறுகும்' என முடியும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- 2×3=6

35) தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக

36) வேலோடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலோடு நின்றான் இரவு - இக்குறட்பாவிற்கு அலகிடுதல் தருக.

37) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:- 5×5=25

38) அ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க (அல்லது)

ஆ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும், பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப் பேச்சு ஒன்றை உருவாக்குக

39) அ) தெருக்களில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றக்கோரி மாநகராட்சி ஆணையருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக. (அல்லது)

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

Scanned with CamScanner

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:



41) வீட்டு எண்.5, முத்தமிழ் நகர், புதுக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்துள்ள உதயகுமார் மகள் மதுமதி தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்தின் உறுப்பினராகச் சேர்வதற்கான படிவத்தில் தேர்வர் தம்மை மதுமதியாகக் கருதி படிவத்தைப் பூர்த்தி செய்க

42) அ) மொழிபெயர்க்க:

Kalaignar Karunanidhi is known for his contributions to Tamil literature. His contributions cover a wide range: Poem, letters screen plays, novels, biographics, historical novels, stage-plays, dialogues and movie songs. He has written Kuraloviam for Thirukural, Tholkaapiya poonga, Poombukar as well as many poems, essay and books. Apart from literature, Karunanidhi has also contributed to the Tamil language through art and architecture like the Kuraloviyam, in which kalaignar wrote about Thirukkural through the construction of Valluvar kottam he gave an architectural presence to Thirukkural in Chennai. At Kanyakumari, Karunanidhi constructed a 133-foot-high statue of Thiruvalluvar in honour of the Scholar.

(அல்லது)

ஆ) நடப்புலகில் இல்லாமல் தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்க்கும் தம்பி; திறன்பேசியிலே விளையாடும் தங்கை; காணொலி விளையாட்டில் மூழ்கியிருக்கும் தோழன்; எப்போதும் சமூக ஊடகங்களில் இருக்கும் தோழி; இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியலிடுக.

## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க:- **3x8=24**

43) அ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக. (அல்லது)

ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

44) அ) "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப்பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக. (அல்லது)

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

அ) பள்ளி ஆண்டு விழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கதை/கட்டுரை/சிறுகதை/கவிதை நூலுக்கான மதிப்புரையை - நூலின் தலைப்பு - நூலின்மையப் பொருள்- மொழிநடை - வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு- சிறப்புக் கூறு - நூல் ஆசிரியர் (அல்லது)

ஆ) சான்றோர் வளர்த்த தமிழ் - முன்னுரை- சதகம் சமைத்து - பரணி பாடி - கலம்பகம் கண்டு - உலாவந்து - அந்தாதி - கோவை நூல்கள் - முடிவுரை

********

Scanned with CamS